முருகப்பெருமான் துணை

**மகான் அம்பிகானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.09.2022**, சனிக்கிழமை

1. தவத்தின் சக்திமிகு வரத்தை
   தருமமாக்கி மக்களெல்லாம் அடைய
   அவதாரம் புரிந்து அன்னதானமெனும்
   அறச்சேவை ஆற்றும் அரங்கனே
2. அரங்கனே உன் அனுகூலம் கிட்ட
   அகிலத்தார்க்கு ஞானியாக உண்டான
   வரங்கள் கை கூடுமெனக் கூறி
   வழங்குவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை சுபகிருது தரிவை திங்கள்
   அகிலமதில் சப்தம திகதி காரி வாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 07ம் நாள், 24.09.2022 சனிக்கிழமை)
   பேசிடுவேன் அம்பிகானந்தர் யானும்
   பேருலகம் ஞானபலம்பெற உரைப்பேன்
4. உரைக்கவே மாதரும வழிகளை
   உலகமே ஏற்க வேண்டியே
   மறையாக ஞானம் அருளி
   மக்களை தேற்றும் அரங்கன்
5. அரங்கனே கலியினில் புதுமை ஞானி
   ஆறுமுகனார் மகா அவதாரம்
   வரங்கள்தனை வள்ளலாக வாரி
   வழங்கியருளும் ஞான சபையை
6. சபையை கண்டு கலியுகமக்கள்
   சரணாகதி கொண்டு வர
   அபயமென வணங்கி வருக
   அறத்தின் வழி பொருளுதவிவர
7. வருகவே உலகம் எங்கிலும்
   வளரும் தரும வேலியாக
   முருகப் பெருமான் அருளுடன்
   முழுமை ஞான பலமும் கூடி
8. கூடியே கலியுக மக்கள் தனக்கு
   குருவருள் மூலமாக திருவருள் நாடி
   நாடியே ஞானவான்கள் எனும் அடையாளம்
   ஞானிகளாகவே ஆக உண்டான பலம்
9. பலமோடு பாருலகையே வழிநடத்தும்
   பலமான ஞான தலைமை தனையும்
   சலனமற உலகினில் இனிதே படைத்து
   சாதிப்பர் ஞான ஆட்சியாக

10. ஆகவே அரங்கமகான் அவதாரத்தின்
அற்புதங்கள் கலியுகம் தன்னில்
ஜெகமெங்கும் அனுகூலமாகி மக்களின் மூலம்
செப்பிடுவேன் விந்தைகள் நடந்தேறும்

11. நடந்தேறும் ஞான சித்தர் காலமாக
நாடெங்கிலும் ஞான பண்டிதனின் தலைமை
தடையின்றி உருவாகி ஞானஆட்சி
தவராஜனின் தேடலாக நிறைவேறும்

அம்பிகானந்தர் அனுகூல ஆசி முற்றே

–சுபம்–